

பாடம் 5

ஜூலை 27–ஆகஸ்ட் 2

# தீர்க்கதரிசிகளின் அழைப்புக்குரல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *1சாமு 8:10-18; ஆமோஸ் 5:10-15; மீகா 6:8; ஆதி 19:1-13; எசே 16:49; ஏசா 1:15-23.*

**மனன வசனம்:** மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். மீகா **6:8.**

வேதாகமத்தில் ஆர்வமூட்டும் கதாபாத்திரங்கள் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள். கண்டிப்புடன் பேசினார்கள்; துணிவுடன் அறிவித்தார்கள்; வருத்தமடைந்தார்கள்; கோபப்பட்டார்கள்; வெகுண்டெழுந்தார்கள்; தாங்கள் அறிவித்தசெய்திகளை நடித்தும்காட்டினார்கள். அவர்களால் அசௌகரியத்திற்கு ஆளானவர்களும் இருந்தார்கள்.

தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல், யூதா தேசங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். தேவனுக்கு உண்மையுடன் வாழும்படித் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களிடம் வேண்டினார்கள். அந்த மக்களும் மன்னர்களும், சுற்றிலுமிருந்த தேசத்தாரின் வாழ்க்கை முறைகளுக்கும் சிலைவழிபாடுகளுக்கும் எளிதில் இழுக்கப்பட்டார்கள். எனவே மனந்திரும்பும்படி தீர்க்கதரிசிகள் அழைத்தபோதெல்லாம் அந்த மக்கள் நன்றியின்றி நடந்தார்கள். தேவ அன்பையும், அவர்களுக்காக தேவன் முன்பு செய்ததையும் தீர்க்கதரிசிகள் நினைவூட்டினார்கள். தேவனைவிட்டு விலகுவதால் உண்டாகும் விளைவுகளைக் கூறி, சில சமயம் எச்சரித்தார்கள்.

மக்களும் தலைவர்களும் தரித்திரரையும் எளியவர்களையும் ஆதரவற்றோரையும் ஒடுக்கினார்கள். சிலைவழிபாடு, பொய் மார்க்கப்பற்றைப் போலவே தரித்திரரையும் எளியவர்களையும் ஒடுக்குவதும் ஆக்கினைக்குரிய குற்றமாகும்.

*2019, ஆகஸ்ட் 3 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# நியாயம்செய்யும்படி அடிக்கடி கொடுக்கப்பட்ட அழைப்பு

இஸ்ரவேல்குறித்து தேவன் மிகத்தெளிவான திட்டம் வைத்திருந்தார்; ஆனால் இஸ்ரவேலர்தான் எதிர்பார்ப்புக்கேற்றபடி வாழவில்லை. தேசத்தில் குடியிருந்து ஒருசில தலைமுறைகளுக்குள்ளாகவே, தீர்க்கதரிசியும் நியாயாதிபதியுமான சாமுவேலிடம் 'சகல ஜாதிகளுக்குள்ளும் இருக்கிறபடி' தங்களைஅரசாளஒருராஜாவைநியமிக்கவேண்டுமென்று கேட்டார்கள். 1சாமு 8:5.

**கேள்வி: ராஜா வேண்டுமென்று கேட்ட மக்களுக்கு சாமுவேல் கொடுத்த எச்சரிப்பு என்ன? 1சாமு 8:10-18.**

பிறதேசத்தார்போல வாழ இஸ்ரவேலரும் ஆசைப்படுவது சாமுவேலுக்குப் புரிந்தது. முதல் ராஜாவான சவுலுக்கு சாமுவேல் ஆலோசகராக இருந்தாலும், சாமுவேல் சொன்னதுபோலவே நடக்கஆரம்பித்தது. இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் பொற்காலமான தாவீது, சாலொமோனின் நாட்களிலும்கூட பாவச்சோதனைகளுக்கும் ஊழலுக்கும் அதிகார வெறிக்கும் அந்த ராஜாக்கள் தப்பமுடியவில்லை.

இஸ்ரவேல் மற்றும் யூதாவினுடைய ராஜாக்களின் நாட்களில் தேவன் பேசிவந்தார். தம் சித்தத்தைத் தெரிவிக்கவும், சமுதாயத்தில் மறக்கப்பட்ட நிலையிலுள்ள மக்கள்குறித்து தாம் கொடுத்திருந்த பொறுப்புகளை நினைவூட்டவும் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

சமுதாயத்தில் நேர்மையாக வாழ்ந்து, நியாயமே செய்யும்படி எபிரெயத் தீர்க்கதரிசிகள் மீண்டும்மீண்டும் வலியுறுத்தினார்கள். இஸ்ரவேல் மக்களும் தலைவர்களும் உண்மையின்றி நடந்தபோது, கடிந்துகொண்டார்கள்; புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக, குறிப்பாக இஸ்ரவேலர் தேவசித்தப்படி செய்யத் தவறியதால், பாதிக்கப்பட்டவர்களுக்காக தீர்க்கதரிசிகள் உடனுக்குடன் குரல்கொடுத்து வந்தார்கள்.

நியாயமாகவாழபழைய ஏற்பாட்டுதீர்க்கதரிசிகள்வலியுறுத்தினார்கள்; இன்று நாம் மெத்தனமாக இருக்கிறோம்; இதை ஒப்பிட்டு ஆபிரகாம் ஹெஸ்கெல் பின்வருமாறு எழுதுகிறார்: 'தீர்க்கதரிசிகளைக் கலங்கப்பண்ணின காரியங்கள் இன்று உலகம் முழுவதிலும் தினமும் நிகழ்கின்றன. அநியாயத்தை அவர்கள் சற்றும் பொறுக்கவில்லை என்பது நம்மை நடுங்கச்செய்யவேண்டும். அநியாயமும் மாய்மாலமும் பொய் புரட்டும் கோபக்கொந்தளிப்பும் துயரமும் நிகழ்ந்துவருவதை நாமே கண்கூடாகப்பார்த்தும், நமக்குக் கோபமோ கலக்கமோ வருவதில்லை. சிறு அநியாயத்தைக்கூட, தீர்க்கதரிசிகள் பெரிதுபடுத்தி காட்டினார்கள்.'

தேவனுடைய மனதையும் சிந்தையையும் இவர்கள் வெளிப்படுத்திக் காட்டுகிறார்கள். உலகத்தில் அநியாயத்தையும் துன்பத்தையும் கண்டு தேவன் கண்கலங்குவதைக் காண அவர்கள் உதவுகிறார்கள்.

நமக்கும்பிறருக்கும்தீங்குவிளைவிக்கிற, 'சகலஜாதிகளுக்குள்ளும்' காணப்படுகிறவற்றைச் செய்ய நாமும் எவ்வாறெல்லாம் முயல்கிறோம்?

# ஆமோஸ்

'நான் தீர்க்கதரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல; நான் மந்தைமேய்க்கிறவனும், காட்டத்திப்பழங்களைப் பொறுக்குகிறவனுமாயிருந்தேன். ஆனால், மந்தையின் பின்னாலே போகிறபோது, என்னைக் கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார்' என்றான். ஆமோஸ் 7:14,15.

ஒரு தீர்க்கதரிசிக்கான தகுதிகள் தனக்கில்லையென ஆமோஸ் கூறுகிறார். ஆனால், தான் சொல்லும் செய்தியை இஸ்ரவேல் மக்கள் கேட்குமளவிற்கு அவரால் செய்தியை அறிவிக்கமுடிந்தது.

சீரியா, பெலிஸ்தியா, பெனிக்கேயா, ஏதோம், அம்மோன், மோவாப் ஆகிய நாடுகளைப் பட்டியலிட்டு, அவர்களுடைய குற்றங்களையும், வெறிச்செயல்களையும், அராஜாகங்களையும் விவரித்து, தேவன் அவர்களைத் தண்டிப்பாரெனக் கூறுகிறார். ஆமோஸ் 1:3-2:3. தங்கள் எதிரிகள்தாம் இந்தக் குற்றங்களைச் செய்தார்களென நினைத்து இஸ்ரவேலர் திருப்தியடைந்திருக்கலாம்; இந்தக் குற்றங்கள் பலவற்றை இஸ்ரவேலுக்கு எதிராகத்தான் அத்தேசத்தார் செய்திருந்தார்கள்.

பின்னர், யூதாவுக்கு எதிரான தேவனுடைய தீர்ப்புகளையும் அவர் சொல்கிறார். இஸ்ரவேல் தேசம் உடைந்தபோது, தென்பகுதியிலிருந்த தேசம்தான் யூதா. அவர்கள் தேவனைப் புறக்கணித்து, அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதால், அவர்கள் தண்டிக்கப்படுவார்களென எச்சரிக்கிறார். ஆமோஸ் 2:4,5. இப்போது, தங்களுக்கு பக்கத்திலிருந்த தேசத்தாரைத்தானே ஆமோஸ் குற்றஞ்சாட்டுகிறாரென வடதேசத்தார் நிம்மதியடைந்திருக்கலாம். ஆனால் ஆமோஸ் புத்தகத்தின் மீதமுள்ள பகுதிகளில், தேவனுக்கு எதிராக வடதேசத்தார் செய்த தீமைகள், விக்கிரகாராதனை, அநியாயம் பற்றியும் அவர்களின் தொடர் தோல்விகளையும் பற்றியும்தான் பார்க்கிறோம்.

**கேள்வி: எத்தகைய பாவங்கள் குறித்து ஆமோஸ் எச்சரிக்கிறார்? ஆமோஸ் 3:9-11; 4:1,2; 5:10-15; 8:4-6.**

அழிவுகுறித்து எச்சரித்தாலும், தேவனிடம் திரும்புமாறு மக்களிடம் வேண்டுகிறார் ஆமோஸ். அவர்கள் நியாயமாக வாழத் தீர்மானித்து, தங்கள் மத்தியிலிருந்த எளியவர்கள்மேல் அக்கறைகாட்ட வேண்டியிருந்தது. 'நியாயம் தண்ணீரைப்போலவும், நீதி வற்றாத நதியைப்போலவும் புரண்டுவரக்கடவது.' ஆமோஸ் 5:24. ஆமோஸ் தீர்க்கதரிசனத்தின் கடைசி சில வசனங்களில் தேவமக்களின் சிறையிருப்பு திருப்பப்படுமெனச் சொல்லப்படுகிறது. ஆமோஸ் 9:11-15. 'அதிக தேவதுரோகமும் அதிக தேவையும் காணப்பட்ட சமயத்தில் மன்னிப்பையும் நம்பிக்கையையும் பற்றிய செய்தியைக் கொடுத்தார்.' - *EGW, PK, p 283.*

தவற்றைத் திருத்துவதற்கு சிலசமயங்களில் கடிந்துகொள்ள வேண்டியது அவசியமா? எப்போது கடிந்துகொள்ளவேண்டும் என்பதை எவ்வாறு அறியலாம்?

# மீகா

**கேள்வி: 'மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்.' மீகா 6:8. இந்த வசனம் சொல்கிறபடி எவ்விதங்களில் எல்லாம் நாம் வாழமுடியும்?**

---

மீகா 6:8 ஒரு பிரபலமான வசனம். பெரும்பாலான வசனங்கள் போல இதை சுலோகனாகவும் அல்லது 'போஸ்டர்' வசனமாகவும் பயன்படுத்துவது உண்டு. ஆனாலும் இதன் அர்த்தத்தை முற்றிலும் அறிந்திருக்கிறோமா என்பது ஒரு கேள்விதான்.

**கேள்வி: மக்கள் செய்துவந்த என்னென்ன பாவங்கள்குறித்து மீகா கண்டிக்கிறார்? மீகா 2:8-11; 3:8-12.**

யூதாவின் ஆகாஸ் ராஜாவுடைய ஆட்சிக்காலத்தில் தேவமக்கள் வரலாற்றிலேயே மிகக்கீழ்த்தரமான ஆவிக்குரிய நிலையில் இருந்தார்கள். சிலைவழிபாடும், அதுசம்பந்தமான தீமைகளும் பெருகின. எளியவர்களை ஒடுக்கி, அவர்களிடமிருந்து பிடுங்கினார்கள். இது குறித்து வேறு தீர்க்கதரிசிகளும் அவர்களை எச்சரித்தார்கள்.

அக்காலத்தின் பிற தீர்க்கதரிசிகள்போல மீகாவும் அழிவுகுறித்தே தீர்க்கதரிசனம் உரைத்தார். தேவமக்கள் செய்த பாவத்தால் தேவன் கோபமும் துக்கமும் அடைந்ததும், அவர்களுக்கு அழிவு சமீபித்து வந்ததும் மீகா முதல் மூன்று அதிகாரங்களில் சொல்லப்படுகிறது.

ஆனாலும் தேவன் தம் மக்களை விடவில்லை. அவர்கள்மேல் தேவன் வைத்திருந்த அக்கறைதான் தீர்க்கதரிசிகளின் கண்டிப்பான செய்திகளில் வெளிப்பட்டன. அன்பும் அக்கறையும்தான் அவர்களை எச்சரிக்கச் செய்தது. அவர்களை மன்னித்து, சிறையிருப்பைத் திருப்ப தேவன் ஏங்கினார். எப்போதும் அவர்கள்மேல் கோபமாயிருக்க அவர் விரும்பவில்லை. மீகா 7:18-20.

எல்லாரும் கடைப்பிடிக்கவேண்டிய 'சூத்திரம்' இது. நியாயமாக நடக்கவேண்டும், இரக்கத்தை சிநேகிக்கவேண்டும், தாழ்மையாக நடக்கவேண்டும். இவ்வாறு சொல்வது எளிது. ஆனால் இந்த விசுவாசத்தின்படி வாழ்வது எளிதல்ல. காரணம் என்னவென்றால், அது இன்றைய சமுதாயத்தின் நடைமுறைக்கு ஒத்துப்போகாது என்பதால். நியாயம் செய்து, இரக்கத்தை சிநேகித்து, தாழ்மையுடன் நடப்பதற்கு தைரியமும் விடாமுயற்சியும் வேண்டும். ஏனென்றால், அநியாயத்தால் ஆதாயமடைகிறவர்களும், இரக்கத்தைப் பரிகாசிப்பவர்களும், பெருமையாக நடப்பவர்களும் இன்று உலகத்தில் இருக்கிறார்கள். ஆனால் தேவன் சொன்னபடி நடக்கும்போது, நாம் அவருக்குக் கீழ்ப்படிகிறோம்.

நியாயமாக நடப்பதற்கும், இரக்கத்தை சிநேகிப்பதற்கும், தேவனுக்குமுன் தாழ்மையாக நடப்பதற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன?

# எசேக்கியேல்

'சோதோமின் அக்கிரமம்' பற்றி கிறிஸ்தவர்களிடம் கேட்டால், பல்வேறுபாலியல்பாவங்களையும்,வேறுஇழிவானவிஷயங்களையும் பட்டியலிடுவார்கள். அவ்வளவுக்குச் சீர்கெட்டு, அழிவுக்கு பாத்திர மாயிருந்த ஒரு சமுதாயம் பற்றித்தான் ஆதி 19:1-13 கூறுகிறது.

ஆனால் சோதோமின் அக்கிரமம் அதுமட்டுமல்ல. எசேக்கியேல் சொல்வதைக் கவனியுங்கள்: 'இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத் திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை.' எசே 16:49. அந்தப் பட்டணத்தில் பிற இழிவான பாவங்களும் காணப்பட்டன. ஆனால் தங்களிடமுள்ளதைப் பகிர்ந்தளிக்காமல், எளியவர்கள்மேல் அக்கறையற்றவர்களாக இருந் தார்களென எசேக்கியேல் கூறுகிறார்.

**கேள்வி: பாலியல் பாவங்கள் அளவுக்கு இந்தப் பாவங்களையும் தேவன் மோசமானவை களாகப் பார்க்கிறார் என்று நம்புகிறீர்களா?**

ஆமோஸ், மீகா, ஏசாயாவுக்குப்பிறகு வந்த எசேக்கியேலும் வர விருந்த அழிவுகுறித்துதான் ஆரம்பத்தில் அறிவித்தார். ஆனால் எருச லேமை பாபிலோனியர்கள் கைப்பற்றி, அங்குள்ளவர்கள் சிறைப்பட் டுச்சென்றபிறகு, அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்புவது குறித்து அதிகமாகத் தீர்க்கதரிசனம் உரைத்தார்.

**கேள்வி: தாம் எப்படிப்பட்ட மேய்ப்பர் என்பதையும் இஸ்ரவேலின் தலைவர்கள் எவ்வளவு மோசமான மேய்ப்பர்களாக இருந்தார்கள் என்பதையும் எசே 34:2-4,7-16 இல் தேவன் ஒப்பிடுகிறார். பலவீனமான 'ஆடுகளை' அவர்கள் எவ்வாறு மேய்த்தார்களாம்? ஆனால், அந்த 'ஆடுகளை' தேவன் எவ்வாறு மேய்ப்பாராம்?**

சோதோமைக்காட்டிலும் மோசமானவர்களாக இருந்தபோதிலும், அவர்களை அக்கிரமங்களிலிருந்து திருப்புவதற்கு நம்பிக்கையோடு தேவன் செயல்பட்டார். தம் மக்கள்குறித்து புதிய திட்டம் வைத்திருந் தார்; அவர்கள் தேசத்திற்குத் திரும்புவார்கள். எருசலேமின் சிறையிருப்பு மாறும். தேவாலயத்தை மீண்டும் கட்டுவார்கள். தேவன் ஏற்படுத்தியிருந்த பண்டிகைகளை ஆசரிப்பார்கள். அவர்கள் சுதந்தரிக்கும்படி அந்தந்தக் கோத்திரத்திற்குச் சரியாக தேசம் பிரித்துக்கொடுக்கப்படும். எசே 47:13-48:29. எகிப்திலிருந்து விடுதலையான இஸ்ரவேலர் குறித்து தாம் என்ன திட்டம் வைத்திருந்தாரோ அதைச் சிறையிருப்பிலிருந்து திரும்புகிற தம் மக்களிடமும் நிறைவேற்ற விரும்பினார். சமுதாயத்தில் பலவீன மானவர்கள் மேலும், பிறதேசத்தார் மேலும் அக்கறைகாட்டுவதும் அதில் அடங்கும்.

இரண்டாம் வாய்ப்புகளைத் தருகிறவர் நம் தேவன். நல்ல தீர்மானங்களைச் செய்ய வாய்ப்பு பெற்றிருந்த தம் மக்கள் தவறுசெய்தாலும், அவர் இரண்டாம் வாய்ப்பைத் தருகிறார். இது நமக்குத் தருகிற மிகப்பெரிய ஆறுதல் என்ன?

# ஏசாயா

**கேள்வி: சமுதாயத்தில் தன்னைச் சுற்றிலும் எப்படிப்பட்ட நிலை காணப்பட்டதாக தீர்க்க தரிசி கூறுகிறார்? ஏசாயா 1:15-23; 3:13-15; 5:7,8.**

முதல் ஐந்து அதிகாரங்களில், தேவமக்கள் பின்வாங்கிப்போனது குறித்து ஏசாயா கடுமையாக விமர்சிக்கிறார், தேவனைப் புறக்கணித்து தொடர்ந்து தவறே செய்ததால் நெருங்கியிருந்த நியாயத்தீர்ப்பு குறித்து எச்சரிக்கிறார். மக்கள் தேவனிடம் திரும்பி தங்கள் வாழ்க்கையையும் சமுதாயத்தையும் சீர்ப்படுத்தினால் நம்பிக்கையுண்டெனச் சொல்கிறார். ஆனால் மிகுந்த துக்கத்தோடு அவர் பேசுவதை உணரமுடிகிறது. தேவன் எப்படிப்பட்டவர் என்பதையும், தம் மக்களிடம் அவர் என்ன எதிர் பார்க்கிறார் என்பதையும் அவர் புரிந்திருந்ததால், அந்த மக்கள் செய்ய மறந்ததையும், எண்ணற்றோருக்கு அநீதி இழைத்ததையும், தேசத்திற்கு நியாயத்தீர்ப்பு வரவிருந்ததையும் நினைத்துப் புலம்புகிறார்.

அவருடைய தீர்க்கதரிசன ஊழியம்முழுவதிலும் இதே நிலைதான் காணப்படுகிறது. தேவன் செய்ததையெல்லாம் எண்ணிப்பார்க்குமாறு மக்களிடம் கூறுகிறார். எதிர்காலத்தில் அவர்களுக்காக தேவன் செய்ய நினைத்திருப்பதைச் சொல்லி, நம்பிக்கையூட்டுகிறார். எனவே உடனடியாக தேவனைத் தேடும்படிச் சொல்கிறார். அதாவது, அவர்கள் தங்கள் தவறான செய்கைகளிலிருந்து மனந்திரும்பி, மற்றவர்களை நடத்துகிற விதத்தைச் சீர்ப்படுத்தி, அவரோடு உறவைப் புதுப்பிக்கவேண்டும்.

ஏசாயா 58,59ம் அதிகாரங்களில், நியாயத்திற்காக மீண்டும் குரல் கொடுக்கிறார். சமுதாயத்தில் 'நியாயம் பின்னிட்டு அகன்றது; நீதி தூரமாய் நின்றது; சத்தியம் வீதியிலே இடறி, யதார்த்தம் வந்து சேரமாட்டாமற்போகிறது' என்கிறார். ஏசா 59:14. அதை தேவன் அறிவாரென்றும், தேவன் தம் மக்களை இரட்சிப்பார் என்றும், அதற்காக 'மீட்பர் வருவார்' என்றும் சொல்கிறார். ஏசா 59:20.

வரவிருந்த மேசியாபற்றிய அறிவிப்புதான் ஏசாயா புத்தகத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. அவர் வந்து இறுதியில் தேவராஜ்யத்தை பூமியில் ஸ்தாபித்து, நியாயத்தை நிலைநாட்டி, இரக்கம் காண்பித்து, குணப்படுத்தி, சிறைப்பட்டவர்களை தம் பக்கம் திருப்புவார்.

இயேசுவின் வாழ்க்கை, ஊழியம், மரணம்பற்றி பின்வரும் தீர்க்கதரிசனங்கள் சொல்வது என்ன? ஏசா 9:6,7; 11:1–5; 42:1–7; 53:4–6. இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் பற்றி இந்தத் தீர்க்கதரிசனங்கள் சொல்வது என்ன?

## மேலும் படிக்க:

'தங்களுடைய காலத்தின் குறிப்பிடத்தக்க கொடுமைகளுக்கும், வெளிப் படையான அநீதிக்கும், புதுமையான ஆடம்பரத்திற்கும், பகட்டிற்கும், இழிவான குடிப் பழக்கத்திற்கும், விருந்திற்கும், கொடிய விபச்சாரத்திற்கும், சிற்றின்பத்தோய்விற்கும் எதிராக தங்கள் சத்தங்களை உயர்த்தினார்கள் தீர்க்கதரிசிகள். ஆனால், பாவத் திற்கு எதிரான அவர்களின் கடிந்துகொள்ளுதலும் கண்டனங்களும் வீணாய்ப் போயின.' *— EGW, PK, p 282.*

'ஜனங்களின் சமுதாய நிலை மிகவும் வருத்தகரமானதாகத் தோன்றியது. மனிதர் ஆதாயத்தை நாடினவர்களாய், வீடுகள் மேல் வீடுகளையும் வயல்கள்மேல் வயல்களையும் சேர்த்துக்கொண்டிருந்தார்கள். நீதியைப் புரட்டினார்கள்; ஏழைகளுக்கு இரக்கம் காட்டவில்லை ... திக்கற்றோரைப் பாதுகாக்கவேண்டிய நியாயாஸ்திரிகள் கூட ஏழைஎளியோரின் கூப்பிடுதலுக்கும், விதவைகள் மற்றும் திக்கற்ற பிள்ளை களின் கூப்பிடுதலுக்கும் தங்கள் செவியை அடைத்துக்கொண்டார்கள்.' *p 306,307.*

'தீர்க்கதரிசிகள் சொன்ன இந்தத் தெளிவான வார்த்தைகளை, ஒவ்வோர் ஆத்துமாவுக்குமான தேவவார்த்தையாக நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒடுக்கப் பட்டு, கஷ்டப்படுகிறவர்களுக்கு இரக்கமும் கனிவும் முன்யோசனையும் கிறிஸ்தவப் பணிவும் கூடிய செயல்களைச் செய்யக் கிடைக்கும் எந்தத் தருணத்தையும் நாம் இழந்துவிடக்கூடாது.' *p 327.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *தீர்க்கதரிசிகள் எதிர்காலத்தைப்பற்றி முன்னுரைப்பவர்களென நாம் நினைக் கிறோம். ஆனால் தாங்கள் வாழ்ந்த பகுதியின் ஒழுக்கநிலைகுறித்து தீர்க்கதரிசி கள் அக்கறையுடன் இருந்ததை பழைய ஏற்பாடு சொல்கிறது. தீர்க்கதரிசி களின் பணிகுறித்து, இப்போது என்ன புரிந்துகொண்டீர்கள்?*

2 *சத்தியத்திற்காக நிற்பது எவ்வளவு ஆபத்தானது, கடினமானது என்பது தீர்க்க தரிசிகளின் வாழ்க்கையிலும் செய்தியிலும் வெளிப்படுகிறது. தீர்க்கதரிசிகள் அவ்வாறு வாழ்ந்ததற்கும் செய்ததற்கும் காரணம் என்ன?*

3 *தேவன் தம் மக்கள்மேல் கோபங்கொண்டதையும் அதேசமயம் மிகுந்த அக் கறைகாட்டியதையும் தீர்க்கதரிசிகளின் எழுத்துகளில் காணமுடிகிறது. தேவ குணத்தின் இந்த இரண்டு அம்சங்களையும் உங்களால் எவ்வாறு சமநிலைப் படுத்திப் பார்க்கமுடிகிறது?*

**பாடச்சுருக்கம்: தேவசித்தத்தையும் தேவவழியையும் காட்டுவதில் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் வைராக்கியம்காட்டினார்கள்; மக்கள் மீறினபோது, கோபத்தோடும் எரிச்சலோடும் தேவனுக்கு ஆதரவாக நின்றார்கள். தேவனுடைய அக்கறைதான் அவர் களில் வெளிப்பட்டது. எளியோருக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் நியாயம்கிடைக்க வேண்டுமென்றும் வைராக்கியம் பாராட்டினார்கள். அநியாயம்செய்வதை நிறுத்தி, தேவனிடம் திரும்புமாறு மக்களை அழைத்தார்கள். தம் மக்களுக்கு தாம் நலமான எதிர்காலம் வைத்திருந்தை தேவன்தாமே தரிசனங்கள்மூலம் வாக்குரைத்தார்.**